# பலப்பிட்டிய பிரதேச சபை

# காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலப்பிட்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 2,042,000 இற்கான மூலதன உதவி பெற வேண்டிய உதவிகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளமையால் கடன்பட்டோர் மற்றும் மூலதன உதவிகள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) முன்னைய ஜனாதிபதி ரணஸிங்க பிரேமதாச சிலை அமைந்துள்ள வளவினை சுற்றி பாதுகாப்பு நோக்கமாக கொங்கிரீட் கிரீல் பொருத்தபட்டு மதில் கட்டுவதற்காக 2014 மந்திரி ஏற்பாடுகளின் கீழ் பெற வேண்டிய ரூபா 150,000 இற்கான தொகை மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி என நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி மற்றும் கடன்பற்றோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 9,086 மிகையாகக் காட்டப்பட்டமை 06 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1,229,872 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களினால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 1,220,786 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 61,050 பெறுமதியான 36 பொருட் பதிவேட்டுப் பண்டங்கள் பொறியும் பொறித் தொகுதியின் கீழ்

மூலதனப்படுத்தியிருந்தமையால் நிலையான சொத்துக்கள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளன.

(உ) சபைக்குச் சொந்தமான 02 ஏக்கர் 16 பர்சஸ் அளவான 09 காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 2,023,413 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,116,747 என காட்டப்பட்டுள்ளமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 93,334 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 36,811,825 தொகை எனினும் நிலுவை ஏனைய வருமான கடன்பட்டோரில் ரூபா 35,488,256 தொகையே கழித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 1,323,569 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,323,569 இனால் மிகையாகக் காட்டபட்பட்டிருந்தன.

(ஏ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 29,555,121 தொகையை அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களிடையே பகரிப்படாமல், ஒரே நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் போது ரூபா 273,420 இற்கான வீத வரி மிகைக் கட்டணம் எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் என காட்டப்படாமல் வீத வரி என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) முன்னைய ஆண்டின் போது செலவுக் கடன்கொடுத்தோர் ரூபா 2,029,719 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது அக் கொடுப்பனவு ரூபா 427,730 தொகை என ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் செலவுக் கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதியம் முறையே ரூபா 1,601,989 இனால் குறைவாகவும் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 2,645,313 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 174,901,445 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள் நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், பட்டோலைகள், நாளது வரை பேணப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் மற்றும் காலப்பகுப்பாய்வுகள், திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளை காட்டும் தயாரிக்கப்பட்ட வைப்புப் பதிவேடுகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 24,014,441 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,932,475 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

---------------------------------

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

---------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 12,096,281 இற்கான வீத வரி மற்றும் ரூபா 24,750 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158(1)(அ) மற்றும் 152(4) ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,074,209 தொகை மற்றும் ரூபா 44,836,651 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3 மிகை விதிப்பு

-------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 178,610 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் தலைவர் உட்பட மந்திரிமாரினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்ப்பிக்க வேண்டும் எனினும், 10 மந்திரிமார்களினால் 2014 ஆண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று வழங்கியிருக்கவில்லை. அதே போல் 2013 ஆண்டிற்காக 08 மந்திரிமார்களும் 2012 ஆண்டிற்காக 05 மந்திரிமாரினாலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---

கொஹிலவகுரே வத்த காணி ஏல விற்பனை

---

கொஹிலவகுரே வத்த 01 ஏக்கர், 01 ரூட், 15.6 பர்சஸ் காணி தனியார் கம்பனி ஒன்றினால் 2013 மே 09 ஆந் திகதிய வரைபு இலக்கம் 2013/172 மூலம் 25 துண்டுகளாக பகிரப்பட்டிருந்ததுடன், சபையினால் வீட்டுப் பயன்பாட்டுக்காக 2013 நவம்பர் 13 திகதி வரை அபிவிருத்தி சான்றிதழ் வழங்கியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜனவரி 21 திகதி வரை இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்கவில்லை.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

சபையினால் பயன்படுத்தப்படும் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான காணி உறுதி ஒன்று அல்லது சாட்டுதல் கட்டளை ஒன்று சபையில் காணப்படவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---

பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீட்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்